முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

O.S.No. 471/2018

தேதி : 30-10-2025

(வா.சா.2) – திரு.விஜயராகவன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வழக்கின் விபரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் வாதி சொல்லி தெரியும். வாதியை எனக்கு எத்தனை ஆண்டாக தெரியும் என்றால் சுமார் 15 ஆண்டாக தெரியும். இறந்த குமாரசாமி என்பவரை தெரியுமா என்றால் தெரியும், அவர் தான் என்னை பணம் வாங்குவதற்காக அழைத்தார். அவருடைய போன் நம்பர் உள்ளதா என்றால் உள்ளது. அவர் எந்த எண்ணிலிருந்து என்னை அழைத்தார் என்றால் அது ஞாபகமில்லை. இறந்த குமாரசாமிக்கும் எனக்கும் பழக்கமில்லை என்றும், அவ்வாறு பழக்கம் இருந்தால் அவரின் எண்ணை வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதி போலியான ஒரு ஆவணத்தை உருவாக்கியுள்ளார் என்றும், அதற்கு நானும் துணையாக இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோநோட்டில் உள்ள கையெழுத்து குமாரசாமியுடையதல்ல என்றும், வாதியுடன் சேர்ந்து போலியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குமாரசாமி அவர் என்னை அவருடைய ஊருக்கு அழைத்தாரா என்றால் இல்லை. குமாரசாமியை எனக்கு எத்தனை ஆண்டாக தெரியும் என்றால் சுமார் 20 ஆண்டாக பழக்கம்.

2. அவர் எப்படி பழக்கம் என்றால் வாதியின் மூலம் தான் பழக்கம். கடன் வாங்கும்போது குமாரசாமிக்கு சுமார் வயது என்ன இருக்கும் என்றால் சுமார் 60 இருக்கும். நான் குமாரசாமியை பார்த்ததில்லை என்றும், புரோநோட் வாங்கியதாக காலகட்டத்தில் அவருக்கு 60 வயது என்று சொல்வது சரியல்ல என்றால் சரியல்ல. குமாரசாமி என்னுடைய உயரத்தில் இருப்பாரா என்றால் தெரியாது. என்னுடைய உயரம் என்ன என்றால் தெரியாது. கடன் வாங்கியதாக சொல்லப்படும் காலத்தில் குமாரசாமி ஆம்புலன்ஸ்சில் வந்தாரா என்றால் இல்லை, நல்ல உடல் நிலையில் இருந்தார். அவர் மட்டும் தான் வந்தாரா என்றால் இல்லை, அவரும் சின்னத்துரை என்பவரும்

வந்தார்கள். புரோநோட் எழுதி கொண்டுவரப்பட்டதா அல்லது பின்னர் எழுதப்பட்டதா என்றால் பணம் வாங்கிய பின்னர் அவர் சொல்ல சின்னத்துரை என்பவர் எழுதினார். நான் சொல்வது தவறு என்றும், குமாரசாமி வாதியிடம் பணம் வாங்கவில்லை என்றும், வாதி, நான், சின்னத்துரை, தாராபுரத்தை சேர்ந்த செல்வராஜ் ஆகியோர் சேர்ந்து குமாரசாமியின் சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் உண்மைக்கு மாறாக புரோநோட் உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தகப்பனார் வாதியிடம் எந்த காலத்திலும் பணம் பெற்றுக்கொண்டு புரோநோட் எழுதிக்கொடுக்கவில்லை என்றும், தற்போது வழக்கிற்காக குமாரசாமி வாதியிடம் பணம் வாங்கியதாக சொல்கிறோம் என்றால் சரியல்ல.

ஒம்/– K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.